**லாஹுகல பிரதேச சபை - 2023**

**---------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

லாஹுகல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் கூற்று, காசுப்பாய்ச்ல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு லாஹுகல பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள்,

பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு )

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட முதலீட்டுக் கணக்கின் மீதி ரூபா 1,209,902 காரணம் இனங்காணப்படாது அல்லது அங்கீகாரம் பெறப்படாமல் 27 ஆம் நாளேட்டுப் பதிவின் மூலம் மூலதன முதலீட்டிலிருந்து வருமானத்திற்கான பங்களிப்புக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு பதிவழிக்கப்பட்டிருந்தது. | செயலாளரின் அங்கீகாரத்தின் பிரகாரம் மூலதன முதலீட்டிலிருந்து வருமானத்திற்கான பங்களிப்புக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இத்தவறு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| | விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | காணி மற்றும் கட்டிடங்கள் | 87,152,217 | (i) காணி உறுதிப்பத்திரம்<br>(ii) மெய்மையாய்வு அறிக்கை<br>(iii) நாளதுவரையாக்கப் பட்ட நிலையான சொத்துப் பதிவேடு | காணி உறுதிப் பத்திரம் மற்றும் மெய்மை யாய்வு அறிக்கையை பெறுவதற்கும், நிலையான சொத்துப் பதிவேட்டை நாளது வரையாக்குவதற் கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக் களில் காட்டப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவ தற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இயந்திரம் மற்றும் உபகரணம் | 18,720,533 | பெறுமதியுடன் கூடிய நாளது வரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு | எதிர்காலத்தில் திருத்துவதற்கா ன நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (இ) | மோட்டார் வாகனம் மற்றும் வண்டி | 27.220,000 | | | |
| (ஈ) | தளபாடங்களும் பொருத்திகளும் | 7,385,893 | | | |

### 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | | | |
| (i) | 128 ஆம் பிரிவு | பிரதேச சபையினால் பயன்படுத்தப்படுகின்ற காணிகளின் உரிமை பிரதேச சபையின் பெயருக்கு மாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகளின் உரிமையை மாற்றுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 134 ஆம் பிரிவு | பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள அபிவிருத்தியடைந்த பிரதேசங்களை இனங்கண்டு புதிய வருமான மூலங்கள் இனங்காணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்ச்சி உதவி ஆணையாளருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும் இன்னும் அங்கீகரிக்கப்பட வில்லை. | -மேற்படி- |
| (ஆ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியம் (EPF) சட்டம் மற்றும் 1980 இன் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (ETF) சட்டம் | மொத்த சம்பளத்தின் அடிப்படையில் பங்களிப்புத் தொகை கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் பிரதேச சபையினால் அடிப்படைச் சம்பளத்தின் அடிப்படையில் பங்களிப்புத் தொகை கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டிற்கான ஊழியர் சேமலாப நிதியம் ரூபா 23,908 மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ரூபா 3,586 குறைவாக கணக்கிடப்பட்டு நிதியங்களுக்கு பணம் அனுப்பப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டு முதல் மொத்த சம்பளத்தின் அடிப்படையில் பங்களிப்புத் தொகை கணக்கிடப்பட்டு அவை உரிய நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்படும். | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள்<br>------------------------------ | | | |
| (i) | 5(12) ஆம் விதி | பணம் மற்றும் களஞ்சிய நடவடிக்கைகள் தொடர்பான பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடம் இருந்து பிணை பெறப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | பிணை பெற்றுக் கொள்வதற்கு உத்தியோகத்தருக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ள துடன் எதிர்காலத்தில் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி மற்றும் நிர்வாக விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 59 ஆம் விதி | சபையின் வருமானப் பரிசோதகரால் ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்திலும் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் சந்தை வியாபாரம் மற்றும் கைத்தொழில்கள் தொடர்பான அட்டவணையொன்று தயாரிக்கப்பட்டு மார்ச் 31 இற்கு முன்னர் சபையின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல வருடங்களாக வருமான பரிசோதகர் ஒருவர் இல்லாமையால் இக்கணிப்பீட்டை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 218 ஆம் விதி | சபைக்குச் சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக ஒவ்வொரு வருடத்திற்கு ஒரு முறை பரிசோதனை செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பரிசோதனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 371 | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை முற்பணம் வழங்கப்பட்டு 10 வருடங்கள் முதல் 25 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் ரூபா 83,500 ஆன முற்பணத்தொகை வழங்கப்பட்ட உத்தியோகத்தர் தொடர்பான தகவல்கள் சபையிடம் காணப்பட்ட போதிலும் அம் மீதியை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ந்தும நிதிக்கூற்றுக்களில் முன் கொண்டு வரப்பட்டிருந்தது. | முற்பணத் தொகையை பெற்றுக்கொண்ட உத்தியோகத்தருக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ள துடன் இந்த வருடத்திற்கு அத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காலதாமதமின்றி முற்பணங்களை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 571(1),(2),(3) | வைப்புச் செய்யப்பட்டு இரண்டு வருடங்களை கடந்திருந்த ரூபா 1,184,495 பெறுமதியான வைப்பு மீதிகளை உரிய தரப்பினருக்கு விடுவிக்கப்படுவதற்கு அல்லது நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வருமானத்திற்கு எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தெளிவான தகவல்கள் இல்லாமையால் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வில்லை என்பதுடன் இந்த வருடத்திற்குள் நிதி பிரமாணத்தின் பிரகாரம் வருமானத்திற்கு எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி | வாகன எரிபொருள் தகனப் பரிசோதனை 12 மாதங்களுக்கு ஒரு முறை அல்லது 25,000 கிலோ மீற்றர் தூரம் ஓடப்பட்டதன் பின்னர் பரிசோதனை செய்யப்பட வேண்டிய போதிலும் சபைக்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் பற்றாக்குறை மற்றும் நிதி நிலைமை பற்றாக்குறையால் இப்பணியை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தமை யால் எதிர்காலத்தில் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1987 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை சபையினால் சேகரிக்கப்பட்ட முத்திரை வரிப் பெறுமதி ரூபா 106,002 உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட்டு இந்த வருடத்திற்குள் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு பணத்தை அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைந்த வருடத்திற்காக சபையின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 1,325,408 ஆக காணப்பட்டதுடன் , அதற்கு நேரொத்த முன்னைய வருடத்தின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 703,641 ஆகும்.

### 2.2 நிதி நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைக்குச் சொந்தமான 2 வங்கிக் கணக்குகளுக்கான வங்கி இணக்க அறிக்கைகளில் தொடர்ந்தும் முன் கொண்டு வரப்படுகின்ற ரூபா 116,935 ஆன 5 மீதிகளைத் தீர்ப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இப் பெறுமதி பல வருடங்களாக காணப்பட்டு வருவதுடன் எதிர்காலத்தில் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | இம் மீதியை இணங் கண்டு தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய வருடத்துடன் தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2023 மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2022 மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | - | - | - | - | - | - | - | - |
| ii. | வாடகை | 2,941,000 | 1,601,612 | 1,666,912 | 53,370 | 1,891,000 | 490,512 | 350,663 | 118,670 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 520,000 | 214,900 | 214,900 | 26,563 | 425,000 | 157,500 | 157,500 | 26,563 |
| iv. | ஏனைய வருமானம் | 521,000 | 380,349 | 380,349 | - | 700,000 | 246,264 | 246,264 | - |
| | மொத்தம் | **3,982,000** | **2,196,861** | **2,262,161** | **79,933** | **3,016,000** | **894,276** | **754,427** | **145,233** |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் உப விதிகள் விதிக்கப்படுவதற்கான விடயங்கள் இனங்காணப்பட்டு உப விதிகள் விதிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாததுடன் 2023 திசெம்பர் 31 வரையில் 05 உப விதிகள் மட்டும் விதிக்கப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் உப விதிகள் விதிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | உபவிதிகள் விதிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இன் சபைக்குச் சொந்தமான வங்கிக் கணக்கில் காணப்பட்ட ரூபா 5,000,000 ஆன தொகை இருப்பிலிருந்து மீண்டெழும் செலவுகளை தீர்ப்பதற்கு போதியளவு தொகையொன்றை வைத்துக்கொண்டு மேலதிக தொகை வருமானமொன்றை ஈட்டக்கூடிய மூலங்களில் முதலீடு செய்யப்பட்டு வருமானமொன்றை ஈட்டுவதற்கு செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வருடத்திலும் ரூபா 3,000,000 ஆன தொகையொன்று நிலையான வைப்புக்களில் இடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. | மேலதிக தொகை முதலீடு செய்யப்பட்டு வருமானம் ஈட்டப்பட வேண்டும். |

### 3.3 சொத்து முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபைக்குச் சொந்தமான கட்டிடத்தின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அக் கட்டிடம் அமைந்துள்ள காணியின் பெறுமதி இணங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | காணிகளின் பெறுமதி எதிர்காலத்தில் இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணியின் பெறுமதி இணங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமாக காணப்பட்ட 13 வாகனங்கள் பழுது பார்க்கப்பட்டு மீண்டும் பயன்படுத்தப்படுவதற்கு அல்லது பழுதுபார்க்கப்பட முடியாத வாகனங்கள் பொருத்தமான முறையில் அகற்றப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாத காரணத்தினால் அவ் வாகனங்கள் விளைவற்றுக் காணப்பட்டன. | குறைந்த வருமானத்தை பெறும் சபையொன்று என்பதால் பழுதுபார்ப்பதற்கு தேவையான ஒதுக்கங்கள் இல்லாமையால் பழுதுபார்த்தலில் கால தாமதம் ஏற்பட்டுள்ளது. | வாகனங்கள் பழுதுபார்க்கப்பட்டு மீண்டும் பயன்படுத்தப்படுவதற்கு அல்லது பழுது பாரக்கப்பட முடியாத வாகனங்கள் ஏலத்தில் விற்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற 15 வாகனங்களின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் உரிமையினை மாற்றுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனங்களின் உரிமை சபையின் பெயருக்கு மாற்றப்பட வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் சுற்றுலா வலயங்களில் கழிவுகளை-முறையாக அகற்றும் நோக்கத்தில் மாகாண அபிவிருத்தி குறிப்பிட்ட மானியத்தின் (PSDG) கீழ் சபைக்கு பெறப்பட்டிருந்த ரூபா 550,000 செலவிடப்பட்டு 23 குப்பை தொட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், 06 மாதங்களுக்கும் மேற்பட்ட காலமொன்று கடந்திருந்த போதிலும் அவற்றை நிறுவுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் இச் செயற்திட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்படாதிருந்தது. | எதிர்வரும் இரண்டு வாரத்திற்குள் அவற்றை முறையான இடங்களில் நிறுவுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையான இடங்களில் நிறுவப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) பிரதேச அபிவிருத்தி உதவிச் செயற்திட்டத்தின் கீழ் பானமவில் அமைந்துள்ள விடுதிக்கான தளபாடங்கள் மற்றும் சமையலறை உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகை குழுவினால் விலை மனுக்கள் மதிப்பீடு செய்யப்பட்ட போது பொருட்களின் குறைந்த விலை மட்டும் கவனத்திற் கொள்ளப்பட்டமை மற்றும் பொருட்களை பெற்றுக்கொள்ளும் போது எதிர்பார்க்கப்பட்ட தரத்தில் உள்ளனவா என்பதை உறுதிப்படுத்தி பெற்றுக் கொள்ளாமை காரணமாக ரூபா 1,044,100 பெறுமதியான 33 படுக்கைகள் விரிசல் மற்றும் தேய்மானத்துடன் பரிந்துரைக்கப்பட்ட தரத்தில் இல்லை என்பது பௌதீக ரீதியான பரிசோதனையின் போது உறுதி செய்யப்பட்டது. | பொருட்களை பெற்றுக்கொண்ட சந்தர்ப்பத்தில் எவ்வித குறைபாடும் காணப்படவில்லை. காலநிலை நிலைமையின் பிரகாரம் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. இது ஒரு சில படுக்கைகளில் மட்டுமே ஏற்பட முடியுமென்பதுடன் ஏனைய அனைத்து படுக்கைகளும் நல்ல நிலையில் காணப்படுகின்றன. | மரப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு முன்னர் அவற்றின் தரம் தொடர்பாக பரிசோதிக்கப்பட்டு கொள்வனவு செய்யப்பட வேண்டும். |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி வரை சபையின் 15 பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் இதன் காரணத்தினால் சபையின் நாளாந்த கடமைகளை மேற்கொள்வது கடினமாக இருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 ஆம் பிரிவு மற்றும் நிதிப்பிரமாணம் 133 (1) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வின் மூலம் நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேம்படுத்தல் மற்றும் செயலாற்றலை அதிகரிப்பதற்கான பரிந்துரைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் பிரகாரம் நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேம்படுத்தல் மற்றும் செயலாற்றலை அதிகரிப்பதற்கான பரிந்துரைகள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். |

**4.2 கணக்காய்வுக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2019 சனவரி 12 ஆம் திகதிய DMA/01-2019 ஆம் இலக்க உள்ளக கணக்காய்வு வழிகாட்டி தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டில் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்தவக் குழு ஸ்தாபிக்கப்பட்டு குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் வருடம் முதல் இக் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கான செயற்பாட்டு நடைமுறை ஆரம்பிக்கப்பட்டு மற்றும் கூட்டங்களை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

**4.3 சுற்றாடல் பிரச்சினை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் பானம, லாஹுகல மற்றும் ஹுலங்னுகே ஆகிய 03 இடங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்ற திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்திற்காக 1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களின் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்று பெறப்பட வேண்டிய போதிலும், சபையினால் செல்லுபடியான சுற்றாடல் அனுமதிப்பத்திரமொன்று ஒன்று இல்லாது திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையம் பராமரிக்கப்பட்டு வந்தது. | எதிர்காலத்தில் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செல்லுபடியான சுற்றாடல் அனுமதிப்பத்திரமொன்று பெறப்பட வேண்டும். |

**4.4 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு தேவையான அளவுகோல்கள் தயாரிக்கப்பட்டு அவற்றுக்கான தரவுகள் சேகரிக்கப்பட்டு நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொண்டமை தொடர்பான அறிக்கைகள் பேணப்பட்டிருக்கவில்லை. | இதன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு தேவையான தகவல்கள் சேகரிக்கப்பட்டு அதற்கு தேவையான நிதி ஏற்பாடுகளை ஒதுக்கி கொள்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |